மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

பிறப்பிப்பவர் : மரு. எஸ்.அனிஷ் சேகர், இ.ஆ.ப.,

ந.க.எண். 39095/2017/ஊவ.3. நாள்: 28.12.2021

பொருள்: பணியமைப்பு – மதுரை மாவட்டம் – ஊரக வளர்ச்சி அலகு – வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம் – ஊராட்சி செயலாளர்(லேட்) P.ராஜகோபால் – 25.02.2016 அன்று பணியிடைக் காலமானது – அன்னாரின் வாரிசுதாரர்/மனைவி திருமதி.E.ஜெயக்கொடி – என்பவருக்கு கருணை அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக இளநிலைஉதவியாளராகப் பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது – இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை

1. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். 2893/2019/ஊ.வ.3. நாள்.13.11.2019.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாயப்புத் துறை, நாள்.26.02.2020
3. அரசுக் கடித எண்.6895/இ3/2021–5 நாள்.14.12.2021.
4. இயக்குநர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18355/ 2021/ டி2, நாள்:18.12.2021

**********

**ஆணை:**

மதுரை மாவட்டம், ஊரக வளர்ச்சி அலகில், வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், இரும்பாடி ஊராட்சி செயலாளராகப் பணிபுரிந்து 25.02.2016 அன்று பணியிடைக்காலமான (லேட்) P.ராஜகோபால் என்பவரின் வாரிசுதாரர்/மனைவி திருமதி.E.ஜெயக்கொடி என்பவருக்கு பார்வை(1)ல் காணும் நடவடிக்கைகளின்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 14.11.2019 முற்பகல் முதல் இளநிலைஉதவியாளராக பணியேற்று, தற்போது அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரிந்து வருகிறார்.

அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாயப்புத் துறை, நாள்.26.02.2020 –ன்படி திருமதி.E.ஜெயக்கொடி என்பவர் இளநிலைஉதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 14.11.2019 முற்பகல் முதல் தனியரின் பணியினை இளநிலைஉதவியாளர் நிலையில் வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வாணை விபரம் தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனச் சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
மதுரை.

பெறுநர்:
திருமதி.E.ஜெயக்கொடி, இளநிலைஉதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம், அலங்காநல்லூர். (உரிய வழிமுறையாக).

நகல்.
1. வட்டார வளர்ச்சி அலுவலர்(வஊ/கிஊ),
   ஊராட்சி ஒன்றியம், அலங்காநல்லூர்.
2. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை.